**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : DVC.No.1/2023 |
| Deposition of Witness for | : RW – 2 |
| Name and Age | : கண்ணு (வயது 75) |
| Father / Husband Name | : வெங்கட்ராமன் |
| Occupation | : விவசாயம் |
| Village | : சவுளூர் |
| Taluk | : காவேரிபட்டினம் |

**நாள்** – 07.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Petitioner present. R3, R4 present. R1 absent.**

**RW–2**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு மனுதாரர் எனது மருமகள். மாரிமுத்துவின் மனைவி ஆவார். மனுதாரரை நிச்சயம் செய்து மூன்றாம் நாளே 1ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்தோம். திருமணத்தின்போது எனது மகனுக்கு சீர்வரிசையாக 20 சவரன் தங்க நகையும், ஒரு ே◌ஹாண்டா இருசக்கர வாகனமும் பெற்றுக்கொண்டேன். திருமணத்தின்போது என் மீது குற்றவழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எனது மகன் பெங்களூரில் மாதம் ரூ.40,000/– சம்பாதித்தார் என்றால் சரிதான். திலகவதி என்பவரை எனக்கு தெரியாது. அவருக்கும் எனது மகனுக்கும் தகாத உறவு என்றால் சரியல்ல. எனது மகன் வரதட்சனை பெறவில்லை. எனது மருமகள் எங்களுடன் இரண்டு மாதங்கள் தான் வசித்து வந்தார் அதன்பிறகு பெங்களூர் சென்றுவிட்டார். என் பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்கமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். கையொப்பம் என்னுடையது தான். எனது மருமகளுடன் சேர்ந்து வாழ வேண்டி OP.No.133/2020 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது எனது மகன் திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால் சேர்ந்த வாழ்வது என கூறியதால் திரும்ப பெற்றுக்கொண்டோம். மீண்டும் சேர்ந்து வாழ வேண்டி OP.No.180/2022 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முனியப்பன் சாட்சியாக விசாரிக்கவில்லை. என் மகன்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.07 17:33:58 +0530

மாரிமுத்துவிற்கும் எனது மருமகளுக்கு இதுவரை விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான். விவாகரத்து ஆகாமலேயே சுகஸ்ரீ என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டாவது திருமணம் சம்மந்தமாக புகார் கொடுத்தால் காவல்நிலையம் விசாரணைக்கு சென்றேனா என்றால் இல்லை. மேற்படி புகார் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் இரண்டாவது திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் OP.No.180/2022 என்ற வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். ம.சா.ஆ.15 ஆவண படி மங்கம்மாளின் நகைகளை இந்தியன் வங்கி, காவேரிபட்டினம் கிளையில் ரூ.1,80,000/-ற்கு அடமானம் என்பெயரில் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதே வங்கியில் மங்கம்மாளுக்கு உரிமையான நகைகளை ரூ.3,30,000/-ற்கு அடமானம் என் பெயரில் வைக்கப்பட்டது என்றால் சரிதான். வீடு கட்டுவதற்காக மனுதாரரிடம் ரூ.15,00,000/- கேட்டோம் என்றால் சரியல்ல. 24.11.2019ம் தேதி மனுதாரரிடம் ரூ.15,00,000/- கேட்டதாக என் மீதும், எனது மகன்கள் மீதும் அனைத்து மகளிர் காவல்நிலையம் கிருஷ்ணகிரியில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது மருமகள் கொடுத்த மேற்படி புகார் சம்மந்தமாக மனு ரசீது ம.சா.ஆ.10 பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 19.02.2020ம் தேதி எதிர்மனுதாரர்கள் மீது காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி அவர்களிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நானும் என் மருமகள் மீது காவேரிபட்டினம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. எனதுமகன் மாரிமுத்துவிற்கும், மனுதாரருக்கும் இரண்டு குழந்தைகள் ஆண் குழந்தை ஒன்று மற்றும் பெண் குழந்தை ஒன்று ஆகும். மனுதாரருக்கும் குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் 1-வது எதிர்மனுதாரர் கொடுக்க முடியாது. மாரிமுத்துவிற்கு திலகவதி என்ற பெண்ணுடன் தகாத உறவு உள்ளதாலும், சுகஸ்ரீ என்ற பெண்ணுடன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் தான் மனுதாரர் அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கொடுமை செய்ததால் தான் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.07 17:34:11 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : DVC.No.1/2023 |
| Deposition of Witness for | : RW – 3 |
| Name and Age | : மாரியப்பன் (வயது 44) |
| Father / Husband Name | : கண்ணு |
| Occupation | : கிராணைட் கம்பெனி |
| Village | : எம். சவுளூர் |
| Taluk | : காவேரிபட்டினம் |

**நாள்** – 07.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Petitioner present. R3, R2 present. R1 absent.**

**RW–3**

**எதிர்மமனுதாரர் தரப்பில் முதல் விசாரணை.**

நான் வழக்கில் நான்காவது எதிர்மனுதாரர் ஆவேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மனு தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரர் எனது தம்பியின் மனைவி ஆவார். திருமணத்திற்கு பின்னிட்டு நான், மனுதாரர் மற்றும் பெற்றோர் கூட்டுகுடும்பமாக வாழ்ந்தோம் என்றால் ஆறுமாத காலங்கள் வாழ்ந்தோம். திருமணத்தின்போது மாரிமுத்து பெங்களுரில் வேலை செய்து வந்தார் என்றால் திருமணத்திற்கு பிறகு ஆறு மாதம் பெங்களுரில் வேலை செய்தார். அந்த சமயத்தில் மனுதாரரிடம் வீடுகட்டுவதற்காக ரூ.15,00,000/– கேட்டேன் என்றால் எனது தம்பியிடம் கேட்டேன், மனுதாரரிடம் கேட்கவில்லை. மேற்படி தொகையை கொடுக்காததால் மனுதாரரை நான், எனது பெற்றோர் கெட்ட வார்த்தையில் திட்டி வன்கொடுமை செய்தோம் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக எங்கள் மீது கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எங்கள் மீது கொடுக்கவில்லை. மேற்படி புகார் மீது மனு ரசீது எண்.297/2019 என பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி புகார் விசாரணைக்கு ஆஜரானேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எங்கள் மீது காவல் கண்காணிப்பாளர்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.07 17:34:18 +0530

அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தம்பி மீது புகார் கொடுத்ததால் உடன் சென்றேன். தண்டுகாரணஹள்ளியில் எனது தம்பிக்கு நான் நிலம் வாங்கி கொடுத்துள்ளேன். பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் 2493/2021 என்ற ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும் எனது தம்பியும் பேச்சு வார்த்தை இல்லாமல் தான் இருக்கிறோம் என்றால் சரிதான். சாட்சி பிரமாண வாக்குமூலத்தில் எனது தம்பபிக்கு ஆதரவாக தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் மாரிமுத்துவின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் மனுதாரை கொடுமைபடுத்தினேன் என்றால் சரியல்ல, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்ட பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.07 17:34:24 +0530

Judicial Magistrate,
Palacode.